# ஐ.தே.க. அரசிலிருந்து விலக இ.தொ.கா. முடிவு?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 9 இதழ் 280
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-11-1993

(கொழும்பு)
அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளப்போவதாக தெரிவித்துள்ளது அத்துடன் அரசுக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரம் 3-ம் நாள் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மாவீரர் வாரத்தின் 3ம் நாள் நிகழ்வுகள் நேற்று காலை 9 மணியளவில் கொடி வணக்கத்துடனும் மாவீரர் அஞ்சலியுடனும் ஆரம்பமானது.
அரச அலுவலகங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையம்
(4-ம் பக்கம் பார்க்க)

## அளவெட்டி மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
அளவெட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் கப்டன் வெள்ளை அல்லது நியூட்டன் (செல்வநாயகம் சசிதரன் புங்குடுதீவு), லெப். கதிரவன்
(4-ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னை பற்றிய ஜனாதிபதி டி.பி.யின் கூற்று லண்டன் மாநாட்டில் நிராகரிப்பு

## விசேஷ தீர்மானமும் நிறைவேறியது

(லண்டன்)
இலங்கையில் இருப்பது இனப்பிரச்னையல்ல, பயங்கரவாதப் பிரச்னையே என்று ஜனாதிபதி டி. பி. விஜதுங்காவும் அவரது கட்சியில் சிலரும் கூறிவரும் கூற்றை, லண்டனில் கூடிய அரசு சாராத அமைப்புகளின் மாநாடு நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## அமைதித் தீர்வு தேவை என பலரும் உணர்ந்துவிட்டனர்

(கொழும்பு)
இலங்கையில் கடந்த இரண்டு வாரகாலத்தில் போதும் இடம்பெற்ற சம்பவங்களை உற்று நோக்கும் போது இனப்பிரச்னைக்கு ஒரு அமைதித் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் பலதரப்பட்ட பிரிவினர் உள்ளத்திலும் ஏற்பட்டுள்ளது.
நீதியும் ஜனநாயகத்துக்கு மான இலங்கைக் குழுவின் சார்பில் லண்டனில் கலந்து கொண்ட பிரதிநிதிகளில் ஒருவரான திரு. லூசியன் ராஜகருணநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.
பி. பி. ஸிக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தாவது:
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
யாழ்.மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் இதுவரை அமுலிலிருந்த ஊரடங்கு சட்டம் இன்று புதன்கிழமை காலை 6-00 மணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
கடந்த 12-ம் திகதி மாலை 5-00 மணி தொடக்கம் வடபகுதி முழுவதும் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் நேற்று முன்தினம் காலை 6-00 மணியிலிருந்து நீக்கப்பட்டது தெரிந்ததே.
(கே - ரி)

## ஆண்டிறுதித் தேர்வு புதிய நேர சூசி விபரம்

(யாழ்ப்பாணம்)
ஆண்டு 4 முதல் ஆண்டு 10 வரையான ஆண்டிறுதித் தேர்வு நேரசூசியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
புதிய நேரசூசியின் பிரகாரம் ஆண்டு 4, 5 மாணவர்களுக்கான பரீட்சை டிசம்பர் 1-ம், 2-ம் திகதிகளிலும் (புதன், வியாழன்) ஆண்டு 6, 7 மாணவர்களுக்கான பரீட்சைகள் நவம்பர் 29, 30, டிசம்பர் 1, 2-ம் திகதிகளிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நவம்பர் 30 ஆம் திகதி பிற்பகல் ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் மட்டும் நேரசூசிப்
(8-ம் பக்கம் பார்க்க)

## புதிய கல்வியாண்டு விரிவுரை தாமதிக்க கோரிக்கை
### பாதிக்கப்பட்ட மாணவர் முயற்சி

(யாழ்ப்பாணம்)
1992 ஏப்பிரல் மாதம் நடைபெற்ற விசேட பரீட்சையில் தோற்றி பாதிக்கப்பட்ட மாணவர்கள், புதிய கல்வியாண்டிற்கான விரிவுரைகளை தாமதிக்குமாறு யாழ் பல்கலைக்கழகத்தை கோரவுள்ளனர்.
இது தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று மாலை 3-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் இதில் பாதிக்கப்பட்ட மாணவர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
(வி)

## வை. கோபாலசாமி விரைவில் தி.மு.க.வை கைப்பற்றுவார்?

(சென்னை)
திரு. வை. கோபாலசாமியையும் அவரது ஆதரவாளர்களையும் நீக்கியதனை அடுத்து தி. மு. க. வின் சட்டமன்றப் பிரிவு இளைஞர் அணி, தொழிலாளர் பிரிவு, மாணவர் பிரிவு என அனைத்து பிரிவுகளிலும் பிளவு ஏற்பட்டுள்ளது என்று பி. பி. ஸி தெரிவித்தது.
திரு. வை. கோ. அவர்களை புதிய கட்சியை தொடங்கிப் பார்க்கட்டுமென கருணாநிதி சவால் விட்டபோதும், திரு. வை.கோ.அவர்கள் தி. மு. க. வையே கைப்பற்றப்போவ
(4ம் பக்கம் பார்க்க)

## 8 மாவட்டச் செயலாளர்கள் தி.மு.க.விலிருந்து நீக்கம்

(சென்னை)
கட்சிக்கு எதிரான விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி தி. மு. கழகம் எட்டு மாவட்டச் செயலாளர்களை பதவியிலிருந்து நீக்கி விட்டதாக இக்கழகத்தின் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அறிவித்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## “எமது சுதந்திர வாழ்வுக்கு மாவீரர் ஈகம் வழிகோலும்”
### — அரசியல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)
மாவீரர்களின் ஈகங்கள் எமது சுதந்திர வாழ்வுக்கு வழிகோலும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் விடுத்துள்ள மாவீரர் வாரப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
மாவீரர்களின் தியாகத்தால் அங்குலம் அங்குலமாக விடுவிக்கப்படும் எம் தேசம், உலக வரலாற்றிலே எங்கேயும் கண்டிராத தனித் தன்மையையும் பெருமையையும் கொண்டிருக்கிறது. தமது இளமை வாழ்வை எம் மண்ணுக்காகவே அர்ப்பணித்து, இந்த மண்ணின் மூச்சுக் காற்றோடு கலந்த இவர்கள் நம் ஒவ்
(2-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. [சா] பரீட்சை அனுமதி அட்டைகள்!

(கொழும்பு)
எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவிருக்கும் க. பொ. த (சாதாரண) பரீட்சையில் தோற்றவிருக்கும் வடபகுதி பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படுமென்று, பரீட்சை
(4ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வெற்று எண்ணெய் பரல்களை விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல 10, செம்பியன் வேன், கொக்குவில்.

(ஏ 3609)





பட்டப்பின் கல்வித் தகைமை 1992/93

## கற்கை நெறிக்குப் பதிவு செய்தல்

பட்டப்பின் கல்வித் தகைமை 1992/93 கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை 1993.12.20ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றும் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ஏ 3604)



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# 'வெளிச்சம்' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் கார்த்திகை மாதஇதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழ் "மாவீரர் நாள்" சிறப்பிதழாக மாவீரரைப் பற்றிய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியவற்றைத் தாங்கி வருகின்றது. இந்த இதழில் மாவீரரின் முகப்பக்கத்தையும், 'நினைவழியா நாட்கள்' கவிதை நூலுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையும், பிரம்மஞானி எழுதிய 'மனிதனைத் தேடும் மனிதன்' கட்டுரையின் சென்ற இதழ் தொடர்ச்சியும் இடம்பெறுகின்றன.

மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் வழங்கிய மாவீரர் நாள் செய்தியும், தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் முப்பத்தொன்பதாவது பிறந்தநாளையொட்டிய வாழ்த்துக் கவிதையும், மற்றும் புதுவை இரத்தினதுரை, பழஞ்சோற்றுப் புலவன் இ. செழியன், மு. வே. யோ. வாஞ்சிநாதன், வீ. பரந்தாமன், ச. வே. பஞ்சாட்சரம், முருகனடியான், சங்கீதன், அமரேசன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

இணுவையூர் சிதம்பர செந்திநாதன், தேவரண்ணா, மலரன்னை, சாவித்திரி, அத்தவிதானந்தன் ஆகியோரின் சிறுகதைகளும், லெனின் கட்டுரையும் 'நா. பத்மநாதனின்' 'ஆஸ்த்மா நோய்' எனக்கில நூலுக்கான 'மொழியின் பூங்குன்றனின்' மதிப்புரையையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. இது வெளிச்சத்தின் இருபதாவது இதழாகும். -ஈ

## பசளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் புத்தூர் சந்தி கமநல சேவைத்திணைக்களம் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் அடிக்கட்டு பசளையையும், பழமரக்கன்றுகளையும் விநியோகம் செய்து வருகின்றது. -154

## மாவீரர் நாள் ஏற்பாடுகள்

(உடுவில்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு உடுவில் மக்களால் உடுவில் குளத்தில் "மாவீரர் கப்பல்" ஒன்று காட்சிக்கு விடப்பட்டுள்ளது. கரும்புலிகள், கடற்புலிகள் மற்றும் கடலில் வீரமரணத்தைத் தழுவிய தளபதி கிட்டு, அவருடன் மறைந்த ஏனைய வேங்கைகள் போன்ற மாவீரர்களின் உருவங்கள் தாங்கிய கப்பல் ஒன்று காட்சிக்கு விடப்பட்டுள்ளது.

இரவு வேளையில் மின்சாரம் களால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் ஓடிச் செல்லும் இக் கப்பலை பார்ப்பதற்காக குடாநாட்டின் பல பகுதியிலும் இருந்து திரளான மக்கள் கூடுவதைக் காண முடிகிறது. -109

0 0 0

(கொழும்புத்துறை)

கல்லுண்டாயில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான சிறப்புமிகு பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பந்தலில் போராட்ட கள நிகழ்வுகளைச் சித்தரிக்கும் படங்களும், மாவீரர் படங்களும் தொங்க விடப்பட்டுள்ளன. -154

0 0 0

(பண்டத்தரிப்பு)

சங்கானை சந்தைக்கு அருகிலுள்ள மைதானத்தில் நிறுவப்பட்டுள்ள பிரமாண்டமான பந்தலில் 250க்கு மேற்பட்ட மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுவருகின்றன. இதேவேளை சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்கானை பிரதான வீதியில் அலங்கார வளைவு ஒன்றை அமைத்துள்ளது. பிரதான வீதியெங்கிலும் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. -72

0 0 0

(ஆனைப்பந்தி)

மாவீரர் தினத்தையொட்டி நாவற்குழி லவனிதா குடியிருப்பில் உள்ள "மாவீரர் படிப்பகம்" சிரமதானம்மூலம் திருத்தி அமைக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குடியிருப்பின் சுற்றுப்புறங்களும் குடியிருப்பு மக்களால் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டன. -101

0 0 0

(அரியாலை)

யாழ் - பாஷையூர் சுற்றுலா விடுதிக்கருகாமையிலுள்ள கடற்புலிகளின் பிரதேசக்காரியாலயத்திற்கு முன்பாக அலங்கார வளைவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதில் பருத்தித்துறைக் கடலில் 'டோரு' கடற்படைக் கலம் கடற்புலிகள் தகர்ப்பதையும் படகு இரண்டாகப் பிளந்திருப்பதையும் சித்தரிக்கும் படமும் வரையப்பட்டுள்ளது. யாழ் - தீவகப் பகுதியினரால் சுண்டிக்குளம் கோவில் சந்தியில் அலங்கார வளைவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. -59

# 67,000 பொலிஸார் கடமை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் 67 ஆயிரம் பொலிசார் கடமையாற்றுவதாக பொலிஸ் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள பிராங் டி சில்வா எதிர்வரும் திங்கட்கிழமை பதவி யேற்கவுள்ளார். (உ-கே-பி)

## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

வலி தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகத்தினர் மாவீரர் வாரத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை வுளியங்கண்டுப் பிள்ளையார் கோவிலடி ஒழுங்கையையும், பிரதான வீதியிலுள்ள மதவையும் சிரமதானம் மூலம் இன்று துப்பரவு செய்யவுள்ளனர். —72

## மாவீரர் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை கல்விக் கோட்ட மாவீரர் எழுச்சி விழா யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இன்று 24ம்தேதி புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பிரதிக்கல்விப்பணிப்பாளர், வேலணைக் கல்விக் கோட்டம், திரு. க. கி. நல்லையா தலைமையில் நடைபெறும், தமிழீழக் கல்விக்கழகப்பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன். யாழ். மாவட்டம் அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இ. இளம்பரிதி ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள்.

கிரிக்கெட்

## இன்றைய ஆட்டம்

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெறும் ஐந்து நாடுகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முதல் அரைஇறுதி ஆட்டம் இன்று கல்கத்தாவில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா தென்னாபிரிக்காவையும் நாளைய அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை மே. இந்தியாவையும் எதிர்த்து ஆடுகின்றன. இவ்விரு ஆட்டங்களும் கல்கத்தாவிலேயே நடைபெறுகின்றன. இறுதியாட்டம் 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும். வி)

## எமது சுதந்திர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வொருவரதும் மனங்களிலும் வைத்து வணங்கப்படவேண்டியவர்கள்.

எரிந்துபோன ஒவ்வொரு எதிரி முகாம்களும், குமுறிக் கொந்தளிக்கும் அலை கடல்களும் இவர்கள் ஒவ்வொருவரினதும் கதையினைக் கூறும். எமது மண் விடுவிக்கப்படவேண்டும் என்பதற்காக எதிரியோடு நேருக்கு நேர் களமாடி வீழ்ந்தவர்களும், வெடிமருந்து ஏற்றிய வாகனங்களில் எதிரியோடு மோதி வெடித்தவர்களும், இன்னும் பலவிதமான வீரச் சாவுகளை அடைந்து முகம்கூட அறியாது மறைந்து போனவர்களையும் சுமந்து எமது தேசம் பெருமை கொள்கிறது.

உறுதி மிக்க புரட்சிகரமான கொள்கையுடைய தலைவன் அணியிலே எமது போராட்டம், பல பரிமாணங்களைக் கடந்துகொண்டிருக்கிறது. பெண்மையும் வீரமே என்ற புதிய மரபினை உறைவிடச் செய்து, இந்த மண்ணினதும், சமூகத்தினதும் விடுதலைக்காக 500க்கும் மேற்பட்ட பெண் மாவீரர்கள் இந்த மண்ணிலே வித்தாகியுள்ளனர். ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிருபணமாக்கி, இவர்களது வரலாறு உலகை வியக்க வைத்திருக்கிறது.

முழுமையான வெற்றிக்கு ஆண், பெண் என்ற பேதமற்ற பலமான சாதியே வழிசேலும் என்ற 6,100 மாவீரர்களினதும் தியாகங்கள் சான்று கூறும்.

எமது மண்ணின் விடிவுக்கு விலையாகக் கொடுத்த இந்த மாவீரர் நினைவுகளில் இவர்களின் கனவுகளை நெஞ்சோடு சுமந்து செல்கிறோம் நீண்டு பரந்த கல்லறைகளில் மண்டியிட்டு, நவம்பர் 27ம் திகதியினை மாவீரர் தினமாகக் கொண்டு அவர்களை நினைவு கூருகிறோம். நவம்பர் 26ம் திகதி நள்ளிரவில் சுடர்விடும் தீபங்களில் பிரகாசித்தபடி பூத்திருக்கும் அவர்களின் முகங்களை, நினைவுகளை மனதில் இருத்தி, எங்கள் குனிந்த தலைகளை மீண்டும் நிமிர்த்தி நிமிர்ந்து நிற்கிறோம். இந்தத் தேசம் நிமிர்வதற்காகப் பல்லாயிரம் வேங்கைகள் அணியில் செல்வோம் என்ற இறுதி இலட்சியத்துடன், எங்கள் பாதங்களை ஆழமாகப் பதித்துக்கொள்வோம். -வி


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் திரு. மு. கணபதிப்பிள்ளை ஜே. பி. அவர்கள்

மறவன்புலோவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சமூகசேவையாளரும் எமது நிறுவனத்தின் நிறுவனர் திரு. க. சச்சிதானந்தன் அவர்களின் தந்தையுமாகிய

அமரர் திரு. மு. கணபதிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஜே. பி. அவர்களின்

மறைவையொட்டி நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அமரரின் குடும்பத்தார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

அறவழிப் போராட்டக் குழு
(NVDAG)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(இ 619)



அளவெட்டி — மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வ-து)
உரும்பராய் வீதி, மருதனமடம்.

## கிளைக் குழுத் தேர்தல் 1993

02. தேர்தல் நடைபெறும் திகதி:-
**11 - 12 - 93 சனிக்கிழமை**

இது 23-11-93 பத்திரிகையில் தவறுதலாக 04-12 93 என எம்மால் அறிவிக்கப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

நா. தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-3611)



சின்னச் சின்ன ஆசைகளை வண்ண, வண்ண உன்னத கலைநயம் மிக்க நகைகளை
உங்கள் எழில்மிகு கேசத்திற்கேற்ற அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்று தங்கப் பவுண் நகைகளாக செய்து பெற்றிட வாரீர்!!

# சிறிநதியா நகைமாளிகை

2G, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

(இ-620)

யாழ்ப்பாணம்

# கொழும்பின் பல பகுதியிலும் பெருமளவு படையினர் குவிப்பு

(கொழும்பு)

பூநகரி முகாம் தகர்ப்பின் பின் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வதந்திகள் பரவிவருவதுடன் ஒருவித பதற்ற நிலை உருவாகியிருப்பதையடுத்து இப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளனராம்.

மேலும் கொழும்பு நகரினுள் நுழையும் சகல வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் வேறு முக்கிய நகரங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை பூநகரி மோதலில் கொல்லப்பட்ட படையினருக்கு நினைவஞ்சலி தெரிவித்து ஒட்டப்படும் சுவரொட்டிகளில் இனத்துவேஷ பிரசாரம் ஏதும் மேற்கொள்ளப்படாதிருக்க சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

### மணிவாக்கு

""ஆணவத்துடன் ஆரவு அளித்தது போலப் புகழ்ச்சியை விலைகொடுத்துப் பெறுபவர் வீணர்""

- ஜேம்ஸ் ஜான்சன்

## நமது நோக்கு

### எத்தனை மாற்றம்?

அறுவடைக் காலங்களில் எலிகள் வயல்களில் திரியும். நெற் கதிர்களைக் கொய்து புற்றுக்குள் சேமித்து வைக்கும் இந்த எலிகளைப் பிடிக்கப் பாம்புகள் வரும்.

ஒரு நாள், இந்த எலிகள் மாநாடு கூடிப் பாம்பினை எதிர்க்க ஆலோசித்தன. பாம்புக்கு மணி கட்டினால், அது வருவது தெரியும் என்ற ஆலோசனை நிராகரிக்கப்பட்டது. பூனைக்கு மணிகட்ட எடுத்த முயற்சி தோற்றுவிட்ட அனுபவத்தால்.

நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்குப் பின் எடுத்த முடிவென்ன? எல்லோரும் கூடிநின்று ஒலி எழுப்புவோம்; ஒலிக்குப் பயந்து பாம்பு ஓடிவிடும் என்பது அவர்களது கணிப்பு! ஆனால் நடந்தது வேறு!

இந்த உவமையை வைத்து வள்ளுவர் படைமாட்சியில் கூறுவது என்ன?

""ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்!"" (763)

எலிகள் படைதிரண்டு கடல்போல் ஒலித்தாலும் நாகம் சீறினால் என்னாகும்?

இங்கு நடப்பதென்ன? ஒவ்வொரு முறையும் இராணுவம் தோல்விகளைச் சந்திக்கும்போதும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் செய்யப்படுகின்றது.

விலகியோடும் இராணுவத்தினருக்கு மதிப்பூட்டத் தலைமைப்பீடம் பகீரதப் பிரயத்தனங்களை செய்து வருகின்றன.

ஏராளமாகப் படைவீரர்களைத் திரட்டிப் பயிற்சி கொடுத்து, ஆயுதங்களைக் கொடுத்து, புதிய இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்து, தலைமை அலுவலகங்களை மாற்றிப் பிரமாதப்படுத்துகிறார்கள்.

ஆனால், ஒரு உன்னத குறிக்கோளோடு, குறைந்தளவு வளபாட வசதிகளோடு, வீரர்கள் தாக்கும்போது பாரியபடை எலிப்படையாகிச் சிதறி ஓடுவதே நாம் காணும் காட்சி.

ஏன் வீராவேசத்தோடு தாக்குகிறார்கள்? இழந்த உரிமைகளை மீண்டும்பெற்றிட, அநீதியான நடவடிக்கைகளை நிறுத்திட, பொதுமக்கள்மீது நடாத்தப்படும் கொடூரங்களைக் குறைத்திட, தடைகளை அறுத்தெறிய, நீதியோடு சேர்ந்த வீரத்திற்கு முன் படைகளின் எண்ணிக்கை சிதறிப் போகும்.

எனவே அரசு, படை பலத்தை நம்பிக்கொண்டு தொடர்ந்தும் பிரச்சனைக்கு உரிய தீர்வினைக் காணாது இழுத்தடிப்பது விவேகமானதன்று!

### மாவீரர் வார

# கருத்தரங்குகளும் வேலைத்திட்டமும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு இன்று 24ம்திகதி நடைபெறவுள்ள வேலைத்திட்டங்கள் கருத்தரங்குகள் பற்றிய விபரம்வருமாறு-

வலிகாமம் கோட்டம்,

நல்லூர் வட்டம் கொக்குவில் தென் கிழக்கு - இருபாலை வீதி- துப்புரவு செய்தல், மரம் நடுதல், கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதி, கொக்குவில் பாலர் பாடசாலை வரை துப்பரவு செய்தல், மரநடுகை, கொக்குவில் கிழக்கு சிங்கத்தின் வீதி துப்பரவு செய்தல், மரம் நடுதல்.

சண்டிலிப்பாய் வட்டம்:

சண்டிலிப்பாய் வடக்கு- வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்தல், நவாலி கிழக்கு முருகமூர்த்தி கோயில் துப்பரவு செய்தல், சண்டிலிப்பாய் மேற்கு-வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்தல்.

உடுவில் வட்டம்:

ஏழாலை மத்தி, பெரிய தம்பிரான் கோயிலடி துப்பரவு செய்தல், ஏழாலை கிழக்கு- ஏழாலை மயானம் செல்லும் வீதி துப்பரவு செய்தல்.

சங்கானை வட்டம்:

தொல்புரம் கிழக்கு, வழக்கம்பராய் குளம் துப்பரவு செய்தல், மூளாய், கடலை வீதி துப்பரவு செய்தல், சித்தன்கேணி விஜதா வீதி, துப்பரவு செய்தல். வட்டுக்கோட்டை தெற்கு, மரம் நடுகை செய்தல்.

வட்ட ரீதியாக கருத்தரங்குகள் நடைபெறும் இடங்கள்:

வலிகாமம் கோட்டம்: சண்டிலிப்பாய், மாவீரர் கலையரங்கு உடுவில்/தெல்லி- சங்கு வேலிப் பிள்ளையார் கோவில் முன்றல்.

தென்மராட்சிக் கோட்டம்- கொடிகாமம் -கச்சாய் அ. த. க. பாடசாலை, கரவெட்டி: சாமானந்துறை பிள்ளையார் கோவில் முன்றல்.

வடமராட்சிக் கோட்டம்; கரவெட்டி பார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கரவெட்டி கிழக்கு.

தீவகக்கோட்டம் - முஸ்லீம் பகுதி.

கடற்புலிகள் கோட்டம்: யாழ் மாவட்டத்தில் கொழும்புத்துறை ச. ச. நிலைய வளாகத்தில் (க)

### ஆண்டிறுதித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி) பிரகாரம் நடைபெறமாட்டாது. ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் ஆண்டு 8 மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 11-30 முதல் பி. ப. 1.30 வரையும் நடைபெறும். ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் க. பொ. த (சா. த) பரீட்சைத் திகதிகளுக்கு முன்னர் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆகவே ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் நேரசூசி ஒழுங்குக்கு மாறுபட்டு டிசம்பர் 2ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் பி. ப. 2.30 மணிவரை நடைபெறும். ஆண்டு 9 மாணவர்களுக்கான ஏனைய பாடங்கள் ஆண்டு 8, 10 மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 16, 21 வரை நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட வினாத்தாள் விநியோகம் முன்னர் அறிவித்தவாறு 25-11-93 அன்று நடைபெறமாட்டாது என்றும் இரண்டாம் கட்ட வினாத்தாள் விநியோகம் 29-11-93 திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கே நடைபெறும் என்றும் பரீட்சை சபை செயலாளர் அறிவித்துள்ளார். (சி)

## காவிய நாயகர்கள்

இருளின் போர்வை கலைத்து வெளிச்சம்
தோற்றிடக் கதிரோனின்
உருவில் எழுந்து உதிரம் சொரிந்து
உயர்வின் எழுச்சி அவர்
கருவில் இறப்பை நெற்றியில் எழுதிக்
களித்த வீரரவர்
பெருகும் கொடுமைகள் தீய்ந்து அழிந்திட
நெருப்பில் குளித்த மலர்!

அடிமை விலங்கு ஒடித்தெம் மண்ணில்
அந்நிய வேரறுத்து
உரிமை இழந்த மக்களுக் கெல்லாம்
உரிமைப் பூ அணிந்து
விடிவைத் தோற்றிட விதையாய் மண்ணில்
விழுந்த வீரர் தமிழ்
முடியை மீண்டும் வரலாற்றில் வரைந்த
காவிய நாயகர்கள்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

மாரியிலே மரம் நடவை -
மறக்காமல்
மற்றவரையும் வைக்கச் செய்

### அம்புலன்ஸ் இல்லை

(பண்டத்தரிப்பு)

வலிவெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து ஓடமுடியாத நிலையில் இருப்பதாகவும் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். அரச வைத்தியசாலைக்கு எடுத்து செல்ல முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -72

## இராசிபலன்

24 - 11 - 1993

புதன்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 9)

ஏகாதசி வைகறை 5-30 வரை; உத்திரட்டாதி மு. இ 9-26 வரை. இராகுகாலம் நண்பகல் 12-11 முதல் 1-47 வரை; சுபநேரம் மாலை 4-41 முதல் 6-11 வரை.

மேடம்- காரிய தாமதம், நண்பர் மனஸ்தாபம், பணியால் துன்பம்.

இடபம்- விவேகமானமுடிவு பெண் சகாயம், வீட்டில் மகிழ்ச்சி.

மிதுனம்- தொழில் லாபம், தற்பெருமை, உறவினர் வருகை.

கடகம்- கடும் சினம், கருத்துமோதல், அன்னியர் தொல்லை.

சிம்மம்- மனச் சஞ்சலம், தொழில் நஷ்டம், மாமனார் தொல்லை.

கன்னி- எதிர்பாராதஉறவு, கல்வியில் சிறப்பு, பணவரவு.

துலாம்- திருமண யோகம், விருந்தினர் வருகை, பயண அனுகூலம்.

விருச்சிகம்- அவநம்பிக்கை, குடும்பப்பிரிவு, தனிமைப் படல்.

தனுசு- விதண்டாவாதம், குடும்பத்தில் அமைதிக் குறைவு, பணமுடை.

மகரம்-மனமகிழ்ச்சி, காரிய பலிதம், மனமாற்றம்.

கும்பம்- இனம் புரியாத பயம், தொழில் பாதிப்பு, வேலைக் கஷ்டம்.

மீனம்- வீண் பழி, அதிகாரிகள் வன்மம், கடன்படல்.

—ஜோஸ்யர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

1992 ஏப்ரல் விசேட பரீட்சையில் தோற்றி பாதிக்கப்பட்ட மாணவர்கள், புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகளைத் தாமதிக்குமாறு யாழ். பல்கலைக்கழகத்தைக் கோருவது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு "பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம்" வேண்டுகோள் விடுத்துள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

பனை தென்னைப் பாடசாலைகள் வழமைபோல் இன்று 24-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் எனவும் ஆசிரியர்களும், மாணவர்களும் தவறாது இன்றைய தினம் பாடசாலைக்கு சமுகம் தருமாறும் பனை தென்னை அதிபர் அறிவித்துள்ளார்.

0 0

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்தில்நாதன் தலைமையில் யா. மா. கூ. ச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் கொள்வனவு தொடர்பான விடயம் ஆராயப்படுவதுடன் பொது நிர்வாகத் தொடர்பகப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

0 0

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏழாலைக் கொத்தணியினரின் "ஆணிவேர்" கையெழுத்துச் சஞ்சிகையின் இரண்டாவது வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மு. ப. 11-00 மணிக்கு யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் இடம்பெறும்.

# தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

வடமராட்சி கிழக்கு

யா/வ/கி

| | | | |
|---|---|---|---|
| 466 | 571 | 392 | 871 |
| 430 | 695 | 149 | 378 |
| 09 | 383 | 511 | 627 |
| 48 | 663 | 107 | 842 |
| 186 | 822 | 77 | 485 |
| 156 | 202 | | |

சாவகச்சேரி

யா/சா

| | | | |
|---|---|---|---|
| 28 | 160 | 565 | 666 |
| 715 | 1507 | 1651 | 3118 |
| 3272 | 3458 | 5746 | 6151 |
| 6368 | 324 | 480 | 673 |
| 1064 | 1449 | 1606 | 2346 |
| 2852 | 3001 | 4045 | 4352 |
| 6120 | 6752 | 18 | 236 |
| 667 | 860 | 1765 | 2336 |
| 2638 | 2873 | 2947 | 4148 |
| 4230 | 5677 | 6494 | 35 |
| 78 | 190 | 227 | 430 |
| 633 | 1492 | 2628 | 3544 |
| 3869 | | | |
| 3965 | 6455 | 6649 | 57 |
| 610 | 1240 | 1690 | 2015 |
| 2651 | 3265 | 4036 | 4529 |
| 6298 | 6404 | 6538 | 6604 |
| 46 | 443 | 953 | 1074 |
| 1223 | 2977 | 3350 | 3661 |
| 4308 | 5136 | 5623 | 5661 |
| 6523 | 336 | 661 | 664 |
| 1658 | 1943 | 2445 | 2833 |
| 2878 | 4969 | 6105 | 6123 |
| 6623 | | | |
| 6872 | 93 | 323 | 364 |
| 450 | 525 | 593 | 649 |
| 1104 | 2372 | 5775 | 6238 |
| 6488 | 6602 | 154 | 217 |
| 536 | 672 | 950 | 1282 |
| 1375 | 2133 | 2136 | 3813 |
| 4133 | 4697 | 6552 | 58 |
| 134 | 156 | 309 | 635 |
| 1162 | 3366 | 3969 | 4409 |
| 4435 | | | |
| 4610 | 4896 | 7037 | 463 |
| 645 | 774 | 1265 | 1458 |
| 3400 | 3735 | 3745 | 4116 |
| 512? | 5426 | 6467 | 6626 |

பச்சிலைப்பள்ளி

கி/ப

| | | | |
|---|---|---|---|
| 464 | 148 | 508 | 385 |
| 499 | 263 | 24 | 95 |
| 198 | 534 | 362 | |

வெளியகல்வு

யா/வெ

| | | | |
|---|---|---|---|
| 196 | 414 | 522 | 126 |
| 219 | 346 | 420 | 840 |
| 942 | 23 | 631 | 759 |
| 145 | 542 | 1127 | 416 |
| 581 | 1079 | 143 | 152 |

(4-ம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் இராணுவம் வெளியேறிய பகுதியில் தமிழர் மீண்டும் குடியேற்றம்

(மன்னார்)

மன்னாரில் இராணுவம் வெளியேறிய பகுதிகளில் மீண்டும் தமிழ் மக்கள் குடியேறி வருகின்றனர். இராணுவத்தின் அழிவுகளுக்குள்ளாகிய நெல் வயல்களில் மீண்டும் விவசாயம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடம்பன், நானாட்டான் பகுதிகளில் மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 1992ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இராணுவத்தின் வேக அதிரடித் தாக்குதல் நடவடிக்கையால், மன்னார் பெருநிலப் பரப்பிலிருந்த மக்கள் வெளியேறி மடு இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், வேறு இடங்களிலும் தங்கியிருந்தனர்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்போது மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டதுடன், பல வீடுகள், குடிசைகள் போன்றவையும் இராணுவத்தால் அழிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி, கடந்த ஆகஸ்ட் மாதம் இப்பகுதியிலிருந்து படையினர் வாபஸ் பெற்றது குறிப்பிடத்தக்கது. -ரி

# நிலக்கண்ணி வெடிகளினால் மாதாந்தம் 800 பேர் பலி!

(லண்டன்)

உலக நாடுகள், நிலக்கண்ணி வெடிகளின் பாவிப்பது கட்டுப்படுத்தப்படவேண்டுமென்று அவுஸ்திரேலியாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலகில் 62 நாடுகளில் பத்துக் கோடி நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதினால் மாதாந்தம் 800 பேர் இந்த நிலக்கண்ணிவெடிகளில் சிக்கி பலியாகி வருவதாகவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமே அதிகமான நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-கே-ரி)

## ஓய்வூதியப் பணிகளுக்கு யாழ். செயலகத்துக்கு கம்பியூட்டர் கருவிகள்

(கொழும்பு)

ஓய்வூதியப் பணிகளை விரைவு படுத்துவதற்காக கொம்பியூட்டர் கருவிகள் விரைவில் கப்பல் மூலம் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென்று நேற்று அரசு அறிவித்தது.

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகை அதிகரித்துள்ளதால் இப்பணிகளை விரைவு படுத்துவதற்காக விரைவில் கம்பியூட்டர் கருவிகள், யாழ். அரச செயலகத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு மேலும் தெரிவித்தது. (வி-ரி)

## மாவீரர் சோலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் மாவீரர்வாரத்தை முன்னிட்டு இன்று 24ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு தென்மராட்சி கோட்டத்தில் கெற்பலி என்னும் இடத்தில் மாவீரர் சோலை மரநடுகைத் திட்டம் திறந்துவைக்கப்படவுள்ளது. (ரி)

## நோர்வே செஞ்சிலுவைக்குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

நோர்வேயைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை இந்த தூதுக்குழுவினர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

இலங்கையிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் அமைப்பையும் திட்டங்களையும் இந்தக் குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

இதன் பொருட்டு இவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள செஞ்சிலுவைச்சங்கக் கிளைகளுக்கு விஜயம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-ரி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரவேங்கை நிருபன் (அருளானந்தம் அரவிந்தன், சிறுப்பிட்டி மேற்கு - நீர்வேலி) நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

## கமக்காரர் அறிமுக அட்டை 3 இடங்களில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் யாழ். மாவட்டத்தின் மூன்று கோட்டங்களிலும் இன்று 24ம் திகதி பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விநியோகம் நடைபெறவுள்ள இடங்கள் வலிகாமம் கோட்டம் பி. ப. 3.00 மணி அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி, வடமராட்சிக் கோட்டம் பி. ப. 4-00 மணி சின்னத்தம்பி வித்தியாசாலை மாலுசந்தி, தென்மராட்சிக் கோட்டம் பி. ப. 3-30 மணி திருநாவுக்கரசு வித்தியாசாலை கொடிகாமம். (ரி)

## தமிழீழ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 230 | 1059 | 1607 | 1642 |
| 601 | 1176 | 1441 | 617 |
| 1352 | 1498 | 69 | 1341 |
| 1359 | | | |

## சீமெந்து ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமேந்து தொழிற்சாலை ஊழியர்களுக்குரிய பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கான கடந்தகால ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் இன்று 24ம் திகதி புதன்கிழமை மு. ப. 10-30 மணி தொடக்கம் யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படும். ஊழியர்கள் தேசிய அடையாள அட்டையையும் உடன் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ரி)

## அளவெட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அலெக்ஸ் சிவமாமா (இன்னையா சிவராசா, பலே) ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்.

அளவெட்டியில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவம் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதை அடுத்தே இம்மோதல் ஏற்பட்டது. (ரி)

## 8 மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன். முத்துராமலிங்கம், கண்ணப்பன், வீரபாண்டி ஆறுமுகம், லட்சுமணன், ரத்தினராஜ், செஞ்சி ராமச்சந்திரன், மீனாட்சிசுந்தரம், செல்வராஜ் ஆகியோரே நீக்கம் செய்யப்பட்டவர்களாவார்கள். இவர்கள் அனைவரும் திரு. வை. கோபாலசாமியின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது (வி-ரி)

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள், தற்போது இடம்பெயர்ந்திருந்தால், அதற்கான உறுதிப்பத்திரங்களைக் காட்டி, தாம் விரும்பிய இடங்களில் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியுமென்று பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

க. பொ. த. சாதாரண பரீட்சை, இம்முறை நாடெங்கிலுமுள்ள 3699 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி-ரி)

## இனப் பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"நீதிக்கும் ஜனநாயகத்துக்குமான இலங்கை குழு" என்ற அரசுசாரா இந்த அமைப்புகளின் மாநாடு கடந்த 20ம் 21ம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் இலங்கையில் நிலவும் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையில் பணியாற்றும் அரசு சார்பற்ற பல்வேறு நிறுவனங்கள் பங்குபற்றிய இந்த மாநாட்டில் பல தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டபின் நிறைவேற்றப்பட்டது.

முக்கியமாக இலங்கை ஜனாதிபதியின் கூற்றை நிராகரித்து இலங்கையில் நிலவுவது இனப்பிரச்னையே என்றும் இதனைத் தீர்க்க ஏனைய தரப்புக்களுடனும் கலந்தாலோசித்து தீர்க்கப்படவேண்டும் என்றும்,

அரசு அரசியல் கைதிகளை விடுதலைசெய்யவேண்டும் என்றும் அதேபோல புலிகளும் தம்வசமுள்ள கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இலங்கை சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் பற்றிய பிரச்னைகளும் கலந்துரையாடப்பட்டதாகவும், குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளில் மீளக் குடியமர்பவர்கள் எதிர்கொள்ளும் தொல்லைகள் துயரங்கள் பற்றியும், இதனை எவ்வாறு நீக்குவது பற்றியும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (கே-இ-ரி)

## ஐ.தே.க அரசிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் தனியார் துறையினர் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பெருந்தோட்ட நிர்வாகங்களை அரசு வெளிநாட்டு நிர்வாகத்தினரிடம், வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தே இ. தொ. கா. அரசுக்கு மேற்கண்டவாறு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

உள்ளூர் தனியார் துறையினர் மேற்கொண்டுவரும் பெருந்தோட்ட நிர்வாகங்களை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் கூடாது. அப்படிச் செய்யும் பட்சத்தில் இ. தொ. கா அரசுக்கு எதிரான அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் அரசுக்கு அது இதுவரை வழங்கி வந்த ஆதரவையும் விலக்கிக் கொள்ளும்.

கடந்த 17 வருடங்களாக ஆட்சி புரிந்துவரும் ஐ. தே. க அரசு இ. தொ. காவின் ஆதரவு இல்லாமல் தனித்து இயங்கமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இ. தொ. கா அரசிலிருந்து விலகும் பட்சத்தில் அல்லது அது அரசுக்கு எதிராக அரசியல் நடவடிக்கைகளில் இறங்கும் பட்சத்தில் அரசு பெரும் அரசியல் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிவரும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் இ. தொ. காவுக்கும் அரசுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையைத் தீர்க்கும் விதமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சரும் ஐ. தே. க. பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே, அமைச்சர் கே. என் சொக்ஸி ஆகியோர் அமைச்சர் தொண்டமானுடன் சுமார் மூன்றரை மணி நேர பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையில் எந்த ஒரு இணக்கமும் ஏற்படாத நிலையில் அமைச்சர் தொண்டமான் வெளிநாடு பயணமாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இ. தொ. கா. தொடர்ந்து ஐ. தே. க. அரசுடன் இணைந்து செயல்படுவதா இல்லையா என்பது குறித்தும், அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் எதிர்வரும் 28ம் திகதி நடைபெறவுள்ள இ. தொ. காவின் தேசிய மாநாட்டில் முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## வை. கோபாலசாமி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அறிவித்துள்ளார்.

திராவிடக் கட்சிகளின் வரலாற்றைப் பார்க்கும்போது பிரிந்துபோன கட்சியே செல்வாக்குப் பெற்றதைக் காண முடிகிறது. திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த தி. மு. க. ஆட்சியைக் கைப்பற்றியதும், தி. மு. க.விலிருந்து வெளியேறிய எம். ஜி. ஆரின் அ. தி. மு. க பின்பு ஆட்சிபீடமேறியது.

இப்போது தி. மு. கவிலிருந்து விலக்கப்பட்ட திரு. வை கோபாலசாமிக்கு தமிழகம் எங்கும் இளைஞர்களின் ஆதரவு கட்டுக் கடங்காமல் கெட்டியாக கிடைத்திருக்கிறது. (கே.ரி)

## மாவீரர் வாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பொதுநிறுவனங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களிலும் கொடிவணக்கம் செய்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலிநிகழ்வுகளை அடுத்து மாவீரர்களை நினைவுகூரும் கலைநிகழ்வுகளும் பொதுப் பணி வேலைகளும் இடம் பெற்றன

யாழ் குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் திருவுருவப்படங்களுக்கு விளக்கேற்றி மக்கள் அஞ்சலிசெய்து வருகின்றனர்.

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து, குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்கி தீவுப் பகுதி மக்களும் மாவீரர் வார நிகழ்வுகளில் பெருமளவில் கலந்துகொண்டு, தமது உணர்வுபூர்வ ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

நாவற்குழி, அரியாலை, ஈண்டி வீதி உட்பட பல இடங்களில், தீவக மக்கள் சார்பில் மாவீரர் நினைவு வளைவுகளும், பதாகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. (ரி)

## அமைதித் தீர்வு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரியில் அண்மையில் ஏற்பட்ட போரில் பல உயிர்கள் பலியாகின இதனையடுத்து இனப் பிரச்னைக்கு அமைதித்தீர்வு ஏற்படவேண்டும் என்ற எண்ணம் பலரிடமும் ஏற்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும்

இப்போது அமைதித்தீர்வை ஆதரித்து பௌத்த பிக்குகளின் ஒரு தரப்பினர் மத்தியிலிருந்தும் ஆதரவு வந்துள்ளதாகத் தெரிகிறது.

இனப்பிரச்னைத் தீர்வுக்கு அரசியல் கட்சிகள் எதுவும் தீர்வை முன்வைக்கவில்லை.

ஆனால் இனப்பிரச்னைத் தீர்வுக்கு அரசியல் கட்சிகளிடமிருந்தும் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஏனெனில் அடுத்த ஆண்டு முதல் தேர்தல் காலம் ஆரம்பமாகிறது. இதனால் இனப்பிரச்னைத் தீர்வுக்கு அரசியல் கட்சிகள் தமது ஆலோசனைத் திட்டங்களை இனி முன்வைக்கலாம்.

இனப்பிரச்னைத் தீர்வுக்கான ஒரு நகல் ஆலோசனைத்திட்டம் ஒன்றைத்தயாரிக்க லண்டன் மாநாட்டில் ஆராயப்பட்டது. அத்துடன் அமைதிக்கான வழிவகைகளைத் தயாரிப்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது.

பொதுமக்களின் ஆதரவுடன் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்னைக்கு அடிமட்டத்திலிருந்தே ஒரு தீர்வு காண ஆலோசிக்கப்பட்டது.

மேலும் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காணப்படவேண்டுமென்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்றும். இ. ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10, 836/Bi